# அவினாசிலிங்கம் மகளிர் பல்கலை.யில் பட்டமளிப்பு விழா

Dinamani,dt:29.3.26,pg.no.2




**கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவிக்குப் பட்டம் வழங்கிய பல்கலைக்கழக வேந்தர் தி.ச.க. மீனாட்சிசுந்தரம். உடன், சென்னை ஐஐடி இயக்குநர் வி.காமகோடி, துணைவேந்தர் வை.பாரதி ஹரிசங்கர் உள்ளிட்டோர்.**

**கோவை, மார்ச் 28:** கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தின் 37-ஆவது பட்டமளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவுக்கு பல்கலைக்கழக வேந்தர் தி.ச.க. மீனாட்சிசுந்தரம் தலைமை வகித்து, மாணவிகளுக்குப் பட்டங்களை வழங்கி பேசுகையில், 2047-ஆம் ஆண்டில் இந்தியா 'விக்சித் பாரத்' எனும் வளர்ந்த நாடாக உருவெடுக்க கல்வி மட்டுமே மிக வலிமையான கருவியாகத் திகழும். மாணவர்கள் கல்வி, பொருளாதாரம், தொழில்நுட்பம் மற்றும் மருத்துவம் ஆகியவற்றின் வழியாகத் தேசத்தின் மேன்மைக்கு உழைக்க வேண்டும் என்றார்.

சென்னை ஐஐடி இயக்குநர் வி.காமகோடி சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, தரவரிசையில் முதலிடம் பிடித்த மாணவிகளுக்குப் பதக்கங்களை வழங்கிப் பேசுகையில், நாடு எதிர்காலத்தில் கல்வி, பொருளாதாரம், தொழில்நுட்பம், மருத்துவம் ஆகியவற்றின் வழியாக மேம்பட வேண்டும். குறிப்பாக, உயர்கல்வி கற்க வாய்ப்பில்லாத சூழல் நிலவும் நிலையில், பட்டதாரி மாணவிகள் தலா இரண்டு குழந்தைகளையாவது தத்தெடுத்து அவர்களின் கல்விப் பாதைக்கு வழிகாட்ட வேண்டும். இதன் மூலம் அடுத்த 9 ஆண்டுகளில் தேசத்தில் அனைவரையும் கற்றவர்களாக மாற்ற முடியும் என்றார்.

முன்னதாக, துணைவேந்தர் வை.பாரதி ஹரிசங்கர் 2025-26-ஆம் கல்வி ஆண்டுக்கான அறிக்கையை வாசித்தார். விழாவில், 1,682 இளநிலை பட்டதாரிகள், 532 முதுநிலை பட்டதாரிகள், 107 முனைவர் பட்டதாரிகள் என மொத்தம் 2,328 பேருக்குப் பட்டங்களும், 94 பேருக்கு பதக்கங்களும் வழங்கப்பட்டன. விழாவில், பதிவாளர் ஹை.இந்து, துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.